# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு – 2014/2015
## (March/ April - 2017)

## ED 1212 கல்வியும் மனிதவள அபிவிருத்தியும்
## (Education and Human Resource Development)

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி **ஒன்றில்** இருந்து **இரண்டு (02)** வினாக்களையும், பகுதி **இரண்டில்** இருந்து **இரண்டு (02)** வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக **நான்கு (04)** வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி – I

01. அ. "மனிதவள அபிவிருத்தியானது ஒவ்வொரு தனிமனிதனையும் பொருளியல், அரசியல், சமூக அடிப்படையில் விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டுள்ளது."
இந்தவகையில் மனிதவள அபிவிருத்தி என்பதனால் நீர் விளங்கிக் கொள்வதனை உதாரணங்கள் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் கையாளப்படும் அடிப்படை உத்திகளைக் குறிப்பிட்டு, அவற்றை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

02. அ. மனிதவள அபிவிருத்தியில் பாக்கின்சன் விதியின் முக்கியத்துவத்தை விளக்கி, அதன் பிரயோகம் மனிதவள அபிவிருத்தியில் எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்கின்றது எனப்பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

ஆ. மனிதவளத்தை அபிவிருத்தி செய்வதில் நேரம் பிரதான இடத்தை வகிக்கின்றது. இந்த வகையில் நேரத்தை வீணாக்கும் அம்சங்கள் தொடர்பாக ஆராய்க. (10 புள்ளிகள்)

03. அ. மனிதவளத்தினை விருத்தி செய்வதில் தொடர்பாடலின் பங்கு எத்தகையது? என்பதனை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

ஆ. பாடசாலையில் ஏற்படும் முரண்பாடுகளை முறையாகக் கையாள்வதில் அதிபரின் முகாமைத்துவத் திறன் குறித்து விளக்குக. (10 புள்ளிகள்)

### பகுதி II

04 அ. கல்வித் துறையில் ஏற்படும் மாற்றங்களைப் பட்டியலிட்டு, மாற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்களை விபரிக்குக. (15 புள்ளிகள்)

ஆ. பாடசாலையில் மாற்றங்கள் முன்வைக்கப்படும்போது எதிர்நோக்கப்படும் நடைமுறைச் சிக்கல்களைத் தெளிவுறுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கான தகுந்த ஆலோசனைகளை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

05. அண்மையில் நீர் மேற்கொண்ட பொலன்னறுவை மாவட்டத்திற்கான களப்பயணத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களை ஆராய்க.

அ. பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள சிறுபான்மைச் சமூகத்தின் கல்வி அபிவிருத்திக்குத் தடையாக அமைந்த காரணிகளுள் நீர் இனங்கண்ட காரணிகளை அடையாளப்படுத்தி விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ. மாணவர்களின் கற்றல் அடைவு மேம்பாட்டில் பிரத்தியேக வகுப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றின் பங்களிப்புக்களை எடுத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)

இ. பாடசாலையில் காணப்பட்ட மனித, பௌதீக வளங்களின் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு எவ்வாறான பரிந்துரைகளை நீர் முன்வைக்கின்றீர்? என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

06. அ. தனியாள் ஒருவரைச் சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடையவராக உருவாக்குவதில் கல்வியின் பங்கு குறித்துக் கருத்துரை பகர்க. (15 புள்ளிகள்)

ஆ. தனியாளை அபிவிருத்தி செய்வதன் மூலம் சமூகத்தை அபிவிருத்தி செய்யலாமா? உமது நியாயங்களை உதாரணங்கள் மூலம் முன்வைத்து விளக்குக. (15 புள்ளிகள்)